RNI-NO: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 330 | நவம்பர்.30 2025 ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## ஹிந்து பக்தர்களை பழிவாங்குவதா? தமிழக, கேரள அரசுகளுக்கு நயினார் நாகேந்திரன் கண்டனம்



சென்னை:, நவ.30.-

நாத்திக போர்வைக்குள் ஒளிந்து கொண்டு ஹிந்துக்களை மறைமுகமாக வதைக்கும் பெரும் பாவம் தான், இந்தியா முழுவதும் இண்டி கூட்டணி அரசுகளை அரியணையில் இருந்து ஓட ஓட விரட்டிக் கொண்டிருப்பதாக பாஜ மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை; கேரளாவில் அமைந்துள்ள சபரிமலையில் மண்டல மற்றும் மகரவிளக்குப் பூஜைகளுக்காகக் கோவில் நடை திறக்கப்பட்ட நிலையில், தரிசனத்திற்காகக் காத்திருக்கும் லட்சக்கணக்கான பக்தர்கள் எவ்வித அடிப்படை வசதிகளுமின்றி அவதிப்படுவதாகவும், அந்தக் கூட்ட நெரிசலில் சிக்கி கடந்த 9 நாட்களில் மட்டும் தமிழர் உட்பட 10 பேர் உயிரிழந்துள்ளதாகவும் வெளிவரும் செய்திகள் மிகுந்த மன வேதனையளிக்கின்றன.

பிற கோவில்களைப் போலல்லாமல் 41 நாட்களுக்குப் பிறகு நடை திறக்கப்படும் சபரிமலையில், கைக்குழந்தைகளுடன் பக்தர்கள் குவிவார்கள் என்பது அம்மாநில அரசுக்குத் தெரியாதா? அதுவும் ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் தமிழகத்திலிருந்தும் லட்சக்கணக்கான பக்தர்கள் சபரிமலை நாயகனை நோக்கி படையெடுப்பார்கள் என்பதைக் கேரள அரசு கணிக்கத் தவறி விட்டதா அல்லது ஹிந்துக்கடவுளைத் தரிசிக்க வருபவர்கள் எக்கேடோ கெட்டுப் போகட்டும் எனக் கைகழுவி விட்டுவிட்டதா?

இப்படி நாத்திக போர்வைக்குள் ஒளிந்து கொண்டு ஹிந்துக்களை மறைமுகமாக வதைக்கும் பெரும் பாவம் தான், இந்தியா முழுவதும் இண்டி கூட்டணி அரசுகளை அரியணையில் இருந்து ஓட ஓட விரட்டிக் கொண்டிருக்கிறது.

எனவே, சபரிமலை பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை அம்மாநில அரசு உடனடியாக செய்து தர வேண்டுமெனவும், அதே போல தமிழகத்தில், எம்பெருமான் முருகனைத் தரிசிக்க திருச்செந்தூர் வரும் பக்தர்களை ஆடு மாடுகள் போல அடைத்து வைத்து மூச்சுக் காற்றிற்கு ஏங்க வைக்காமல், திமுக அரசின் இந்து சமய அறநிலையத்துறை தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கிறேன், இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

## இலங்கை வெள்ளம்: கொழும்பு விமான நிலையத்தில் தவிக்கும் தமிழர்களை மீட்க தமிழக அரசு நடவடிக்கை



சென்னை: நவ.30-

இலங்கையில் கனமழையால் விமானங்கள் இயக்கப்படாததால், அங்கு அவதிப்படும் தமிழர்களை மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அயலகத் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர் தெரிவித்தார்.

இலங்கையில் கனமழையால் கடுமையான வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால், இலங்கை தலைநகர் கொழும்பு விமான நிலையத்தில் இருந்து சில தினங்களாக விமானங்கள் இயக்கப்படாததால், துபாய், குவைத் ஆகிய நாடுகளில் இருந்து இலங்கை வழியாக இந்தியாவுக்கு வரவிருந்த 300 க்கும் மேற்பட்டோர் இலங்கையின் மத்தளை விமான நிலையத்தி தங்கி, பின்னர் கொழும்பு விமான நிலையத்துக்கு வந்தனர்.

டிட்வா புயல் காரணமாக சென்னை உள்ளிட்ட நகரங்களுக்கு புறப்பட இருந்த விமானங்கள் ரத்து செய்யப்பட்டதால் 150 தமிழர்கள் உள்பட 300 இந்தியர்கள் கொழும்பு விமான நிலையத்தில் தவித்து வருகின்றனர். உணவு, குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் கிடைக்காமல், அவர்கள் அவதிப்படுவதாக கூறப்படுகிறது.

இந்நிலையில், இலங்கையில் தவித்து வரும் தமிழர்களை மீட்க தமிழக அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. முதல்வர் மு.க. ஸ்டாலின் அறிவுறுத்தலின்படி, கொழும்பில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகளுடன் தமிழக அரசின் அதிகாரிகள் ஆலோசனை நடத்தி வருகின்றனர்.

இது தொடர்பாக அயலகத் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர் செய்தியாளர்களிடம் கூறுகையில், "இலங்கையில் கனமழை, வெள்ளம் காரணமாக விமானங்கள் இயக்கப்படவில்லை. கொழும்பு விமான நிலையத்தில் தவிக்கும் தமிழர்களை மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் உள்ள இந்திய தூதரகத்துடன் தொடர்புகொண்டு, விமான நிலையத்தில் இருக்கும் தமிழர்கள் உள்பட இந்தியர்களுக்கு உதவ கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. அங்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதால் செல்போன்கள் சுவிட்ச் ஆஃப் ஆகியுள்ளது. அதனால், அங்குள்ள தமிழர்களை தொடர்பு கொள்ள முடியவில்லை" என்றார்.

## கல்வி நிதியை விடுவியுங்கள் திமுக எம்பிக்கள் கூட்டத்தில் 12 தீர்மானங்கள் நிறைவேற்றம்



சென்னை, நவ.30.-

3548.22 கோடி ரூபாய் சமக்ர சிக்ஷா கல்வி திட்டத்தின் நிதியை விடுவிக்க வேண்டும் என திமுக எம்பிக்கள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு உள்ளது.

சென்னையில் முதல்வர் ஸ்டாலின் தலைமையில் நேற்று(நவ.29) திமுக எம்பிக்கள் கூட்டம் நடந்தது. பார்லி கூட்டத்தொடர் டிச.1ம் தேதி நடைபெற உள்ளதையொட்டி, ஆலோசனைகள் நடந்தது. கூட்டத்தில் 12 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு:

* மாநில உரிமைகளை மதிக்காமல் அனைத்து வகையிலும் தமிழகத்தை வஞ்சித்து வரும் மத்திய பாஜ அரசுக்கு கண்டனம் தெரிவித்து தீர்மானம்.

* ரயில் திட்டங்களிலும் நிதி ஒதுக்கீட்டிலும் தமிழகத்தை புறக்கணிப்பதாக கூறி, மத்திய பாஜ அரசுக்கு கண்டனம் தெரிவித்து தீர்மானம்.

* பிரதமர் மோடி நேரில் தலையிட்டு கோவை, மதுரை மெட்ரோ ரயில் திட்டங்களை அனுமதிக்க வேண்டும் என வலியுறுத்தி தீர்மானம்.

* கோவை, மதுரை விமான நிலைய விரிவாக்கம், மதுரை பன்னாட்டு விமான நிலையத் திட்டம் ஆகியவற்றிற்கு அனுமதி தர வலியுறுத்தி தீர்மானம்.

* கருணாநிதி பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவுக்கு ஜனாதிபதி ஒப்புதல் அளிக்கவும், கவர்னருக்கு கால நிர்ணயம் செய்யவும் பார்லியில் குரல் எழுப்ப வலியுறுத்தி தீர்மானம்.

* செறிவூட்டப்பட்ட அரிசி வழங்கும் திட்டத்தில் விவசாயிகளைப் பாதுகாத்திட மத்திய அரசுக்கு முதல்வர் ஸ்டாலின் வைத்த கோரிக்கையை உடனடியாக ஏற்றுக்கொள்ள வலியுறுத்தி தீர்மானம்.

* நெல் கொள்முதல் ஈரப்பதத்தை 17 சதவீதத்தில் இருந்து 22 சதவீதமாக உயர்த்த வலியுறுத்தி தீர்மானம்.

* 3548.22 கோடி ரூபாய் சமக்ர சிக்ஷா கல்வி திட்டத்தின் நிதியை விடுவிக்க வேண்டும் என வலியுறுத்தி தீர்மானம்.

* மத்திய அரசின் நான்கு தொழிலாளர் சட்டத் தொகுப்புகளால் தொழிலாளர்களின் உரிமை பாதிக்கப்படக்கூடாது என வலியுறுத்தி தீர்மானம்.

* இந்திய மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், கைது செய்யப்பட்ட மீனவர்கள் மற்றும் படகுகளை விரைவாக விடுவிப்பதற்கும் நிரந்தரத் தீர்வு அவசியம் என வலியுறுத்தி தீர்மானம்.

* பணி நியமனம் பெற்று தற்போது ஆசிரியர்களாக பணியாற்றுபவர்களின் பணி மற்றும் பதவி உயர்வினை மத்திய அரசு பாதுகாக்க வலியுறுத்தி தீர்மானம்.

* கிராமப் புற ஏழை மக்களுக்கு முக்கியமான திட்டமாக இருக்கும் மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு திட்ட நிதியை உடனடியாக தமிழகத்திற்கு வழங்க வலியுறுத்தி தீர்மானம்.

## விஜயை முதல்வராக்க உயிருள்ள வரை பாடுபடுவேன் கோவையில் செங்கோட்டையன் பேட்டி



கோவை, நவ.30.-

'விஜயை முதல்வராக்க, உயிர் மூச்சு உள்ளவரை பாடுபடுவேன்,'' எனறு கோவையில் செங்கோட்டையன் கூறினார்.

த.வெ.க.,வில் இணைந்து, மேற்கு மண்டல அமைப்பு செயலாளராக பொறுப்பேற்றுக் கொண்ட பின், கோவை வந்த செங்கோட்டையனுக்கு, கட்சித் தொண்டர்கள் விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

விமான நிலையத்தில் அவரது பேட்டி:

த.வெ.க.,வின் தலைவர் விஜய், நாளைய தமிழகத்தின் முதல்வர் ஆவார். நேர்மையான, புனிதமான ஆட்சியை தர புறப்பட்டிருக்கிறார். ஆண்டிற்கு 500 கோடி ரூபாய் வருவாய் கிடைத்தாலும், அதை துப்க்கி எறிந்து விட்டு மக்களின் சேவைக்காக துணிந்து இந்த இயக்கத்தை உருவாக்கி இருக்கிறார். அதில் நான் இடம்பெற்று இருக்கிறேன்.

என் உயிர் மூச்சு உள்ளவரை அவரை முதல்வராக்க பாடுபடுவேன். முதல் தலைமுறையில் எம்.ஜி.ஆர்., வழியில் நின்று பணியாற்றினோம். இரண்டாவது தலைமுறையில் ஜெ., வழியில் பணியாற்றினோம். மூன்றாவது தலைமுறையாக, விஜயை ஆட்சி கட்டிலில் அமர உறுதுணையாக இருப்போம்.இவ்வாறு, அவர்கூறினார்.

விமானம் தாமதம் சென்னையிலிருந்து புறப்பட்ட இண்டிகோ விமானம், மதியம் 1.00 மணிக்கு வந்து சேர வேண்டும். இதில் செங்கோட்டையன் வருவார் என்ற ஆவலோடு த.வெ.க தொண்டர்கள் பெருமளவில் கூடியிருந்தனர். ஆனால் தொழில்நுட்ப கோளாறு காரணமாக சென்னையில் இருந்து புறப்பட்ட விமானம் பெங்களூருக்கு திரும்பியது. அங்கு தரையிறங்கி விமானத்தில் ஏற்பட்ட கோளாறு சரி செய்யப்பட்ட பின் கோவை வந்தடைந்தது. இதனால் செங்கோட்டையன் வர மாலை 4.30 மணி ஆனது. இருப்பினும் விமான நிலையத்தில் அவருக்கு, மேளதாளங்களுடன், தொண்டர்கள் உற்சாகமாக வரவேற்றனர்.

## தவெகவில் இணைகிறாரா திருநள்ளாறு எம்எல்ஏ



காரைக்கால், நவ.30.-

காரைக்கால் மாவட்டம் திருநள்ளாறு தொகுதியின் சுயேச்சை எம்எல்ஏவான பி.ஆர். சிவாவும் விரைவில் தவெகவில் இணைய உள்ளதாக ஒரு தகவல் பரவி வருகிறது.

கடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் இத்தொகுதியில் என்.ஆர்.காங்கிரஸ் சார்பில் போட்டியிட வாய்ப்பளிக்கப்படாததால் சுயேச்சையாக போட்டியிட்டு வெற்றி பெற்றார். என்.ஆர்.காங்கிரஸ் பாஜக கூட்டணியில் கடந்த தேர்தலில் இத்தொகுதி பாஜகவுக்கு ஒதுக்கப்பட்டது.

அதேபோலவே வரும் தேர்தலிலும் இத்தொகுதி பாஜகவுக்கே ஒதுக்கப்படும் என்பதும், கடந்த தேர்தலில் பாஜக சார்பில் போட்டியிட்டு தோல்வியடைந்த, தற்போது நியமன எம்எல்ஏவாகவும், பாஜக மாநில துணைத் தலைவர் பொறுப்பிலும் உள்ள தொழிலதிபர் ஜி.என். எஸ்.ராஜசேகரன் மீண்டும் போட்டியிடவுள்ளார் என்பதும் பெரும்பாலும் முடிவு செய்யப்பட்ட ஒன்றாகவே இருக்கிறது.

அதனால், வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் பி.ஆர்.சிவா என்ஆர். காங்கிரஸ் கட்சியில் இணைந்து போட்டியிட திட்ட மிட்டிருந்ததாகவும், ஆனால் கட்சியின் தலைவரும், முதல்வருமான ரங்கசாமியிடம் இருந்து சாதகமான பதில் வரவில்லை என்பதாலும், தவெகவுக்கு தாவும் நோக்கில் காய்களை நகர்த்தி வருவதாக கூறப்படுகிறது.

இந்தச் சூழலில் தவெக பொதுச்செயலாளர் ஆனந்துடன் பி.ஆர்.சிவா இருக்கும் புகைப்படம் ஒன்று நேற்று சமூக ஊடகங்களில் வைரலானது. இதையடுத்து ஆனந்தை சந்தித்து விருப்பம் தெரிவித்து விட்டதாகவும், விஜய் முன்னிலையில் விரைவில் தவெகவில் இணைய உள்ளார் என்றும் தகவல் கசியவிடப்பட்டது.

இதுகுறித்து பி.ஆர். சிவாவிடம் கேட்டபோது, "அது பழைய புகைப்படம். தற்போது வரை தவெகவில் இணைவது குறித்து எவ்வித முடிவும் எடுக்கப்படவில்லை'' என்றார். எனினும் முதல்வர் ரங்கசாமி எடுக்கும் முடிவை பொறுத்தே சிவாவின் அடுத்தகட்ட நடவடிக்கை இருக்கும் என கூறப்படுகிறது.

## பணிகள் முடிவடையாத நிலையில் கோவை செம்மொழி பூங்கா திறப்பு : பழனிசாமி குற்றச்சாட்டு



சென்னை, நவ.30.-

முப்பது சதவீத பணிகள் முடிவடையாத நிலையில், வெற்று விளம்பத்திற்காக, கோவை செம்மொழி பூங்கா திறக்கப்பட்டுள்ளதாக, அ.தி.மு.க., பொதுச்செயலர் பழனிசாமி குற்றம்சாட்டியுள்ளார்.

கடந்த 25ம் தேதி கோவை வந்த முதல்வர் ஸ்டாலின், காந்திபுரம், சிறைச்சாலை மைதான வளாகத்தில், 204 கோடி ரூபாயில் கட்டப்பட்டு வந்த செம்மொழி பூங்காவை, பணிகள் முடிவடையாமல், அவசர கதியில் விளம்பரத்திற்காக திறந்து வைத்துள்ளார். 70 சதவீத பணிகள் மட்டுமே முடிந்துள்ளதாக, கோவை மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

இதற்கு மாநில சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திடம் அனுமதி பெறப்படவில்லை; 30 சதவீத மரங்கள் நடப்படவில்லை. செயற்கை புல் தரைகள் மட்டுமே அமைக்கப்பட்டுள்ளன. முன் நுழைவு வாயில் முகப்பு, மாநாட்டு மையம், சுற்றுச்சுவர், கட்டண விளையாட்டு மைதானம், திறந்தவெளி உடற்பயிற்சிக் கூடம் போன்ற பணிகள் முடிக்கப்படவில்லை.

போதுமான கழிப்பிட வசதிகள் ஏற்படுத்தப்படவில்லை. விளையாட்டு உபகரணங்கள் அமைக்கப்படவில்லை. கிரானைட் கற்கள் பதிக்கும் பணிகள் முழுமை அடையவில்லை.

இப்பூங்காவில் பல பணிகள், 'டெண்டர்' கோரப்படாமல், 'நாமினேஷன்' முறையில், தி.மு.க., அரசுக்கு வேண்டிய ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக தெரிகிறது.

'ஸ்மார்ட் சிட்டி' திட்டத்தின் கீழ், அ.தி.மு.க., ஆட்சியில் உருவாக்கப்பட்ட உக்கடம் பெரியகுளம், குறிச்சி குளம், வாலாங்குளம், முத்தண்ணன் குளம், செல்வசிந்தாமணி குளம், குமாரசாமி குளம், கிருஷ்ணாம்பதி குளம் ஆகிய பூங்காக்கள், தற்போது ஆகாயத் தாமரைகள் படர்ந்து பராமரிப்பின்றி உள்ளன.

அ.தி.மு.க., ஆட்சியில் கட்டப்பட்ட பூங்காக்கள், குளங்கள் என்ற ஒரே காரணத்திற்காக, இவைகளை மாநகராட்சி நிர்வாகம் பராமரிக்காமல் உள்ளது.

அ.தி.மு.க., ஆட்சியில் திட்டமிட்ட, கோவை மெட்ரோ ரயில் திட்டத்திற்கு, சரியான முறையில் முன்மொழிவு அனுப்பாத காரணத்தால், இத்திட்டம் மத்திய அரசால் திருப்பி அனுப்பப்பட்டது. கோவை விமான நிலைய விரிவாக்கமும் கிடப்பில் உள்ளது.

அ.தி.மு.க., அரசு கொண்டு வந்த பல திட்டங்களை, தி.மு.க., அரசு கைவிட்டு விட்டது.

இந்நிலையில், எடுத்தேன் கவிழ்த்தேன் என்று, அரசு சக்கரத்தை சுழற்றும் குணம் கொண்ட முதல்வர் ஸ்டாலின், அரைகுறையாக செம்மொழி பூங்காவை திறந்து வைத்து, கோவை மக்களை ஏமாற்றி, ஓட்டுகளை அறுவடை செய்யலாம் என்று, பகல் கனவு காண்கிறார்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தடுக்க உதயநிதி அறிவுறுத்தல்

சென்னை, நவ.30.-

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்து வரும் நிலையில், அவற்றின் விபரங்களை பெற்ற துணை முதல்வர் உதயநிதி, குற்றங்களை தடுக்க உரிய நடவடிக்கை எடுக்கும்படி, போலீஸ் அதிகாரிகளை அறிவுறுத்தி உள்ளார்.

தமிழகத்தில், 2019ல், பெண்களுக்கு எதிரான குற்ற சம்பவங்களின் எண்ணிக்கை, 5,934 ஆக இருந்தது. தி.மு.க., அரசு பெறுப்பேற்ற பின், கடந்த மூன்று ஆண்டுகளில், 50.71 சதவீதம் அதிகரித்துள்ளது.

குழந்தைகளுக்கு எதிரான குற்ற சம்பவங்களும் உயர்ந்துள்ளன. 2021ல், குழந்தைகளுக்கு எதிரான குற்ற சம்பவங்களின் எண்ணிக்கை, 6,064 ஆக இருந்தது. அதுவே, 2023ல், 6,968 ஆக அதிகரித்துள்ளது.

இந்நிலையில், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள், அவற்றின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த புள்ளி விபரங்களை, காவல் துறை அதிகாரிகளிடம், துணை முதல்வர் உதயநிதி கேட்டுப் பெற்றுள்ளார். அத்துடன் குற்றங்களை தடுக்க, உரிய நடவடிக்கை எடுக்கும்படி, காவல் துறை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தி உள்ளார்.

இதுகுறித்து போலீசார் கூறியதாவது:

தமிழக காவல் துறையில், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றத்தடுப்பு பிரிவு செயல்படுகிறது. இதனுடன், 244 மகளிர் போலீஸ் நிலையங்கள், ஆள் கடத்தல், பெண்களுக்கு எதிரான குற்றங்களை விசாரிக்கும் சிறப்பு புலனாய்வு குழுக்கள், குழந்தைகடத்தல் தடுப்பு பிரிவுகள் இணைக்கப்பட்டு உள்ளன.

ஐ.ஜி., தலைமையில் செயல்படும் இப்பிரிவு, மாநிலம் முழுதும், ஆய்வுக் கூட்டங்கள் நடத்தி, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான, குற்றத்தடுப்பு பணிகளை முடுக்கி வருகிறது. எனினும், குற்றங்கள் குறையவில்லை.

இந்நிலையில், அதிகாரிகளை துணை முதல்வர் அழைத்து பேசிய பின், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றத்தடுப்பு பிரிவு செயல்பாடு வேகம் எடுக்க துவங்கி உள்ளது.இவ்வாறு அவர்கள் கூறினர்.



# வேலூர் ஆவினில், புயல் முன்னெச்சரிக்கையாக போதிய இருப்பு உள்ளதா என மாவட்ட கூடுதல் செயலர் ஆய்வு

வேலூர், நவ.30-

வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி, ஆவின் நிறுவனத்தில், வேலூர் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் / சிறப்பு திட்ட செயலாக்கத்துறை அரசு கூடுதல் செயலாளர் மருத்துவர் ச. உமா, (29.11.2025) டித்வா புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஆவின் நிறுவனத்தில் பால் சேமிப்பு கிடங்கு மற்றும் தரக்கட்டுப்பாட்டு மையத்தை பார்வையிட்டு, ஆவின் பால் உற்பத்தி போதுமான அளவில் உள்ளதா என ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, ஆவின் பொது மேலாளர் இளங்கோவன், உதவி பொது மேலாளர் லிடியா, உதவி பொது மேலாளர் பாசில், விற்பனை பிரிவு மேலாளர் ஹரி, ஆவின் டிரான்ஸ்போர்ட் மேலாளர் ஸ்ரீமன் நாராயணன், ஆவின் ஜி.எம்.செயலர் அமுதா, அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.



# தொடர் கனமழையால் ராமேசுவரத்தில் வீடுகளுக்குள் புகுந்த மழைநீர் பொதுமக்கள் கடும் அவதி

ராமேசுவரம், நவ.30-

டிட்வா புயல் தாக்கம் காரணமாக ராமேசுவரத்தில் தொடர் கனமழையால் குடியிருப்புகளை சுற்றி மழைநீர் தேங்கியுள்ளதுடன், வீடுகளுக்குள் மழைநீர் தேங்கியதால் பொதுமக்கள் கடும் சிரமத்துக்கு ஆளாகியுள்ளனர்.

டிட்வா புயல் காரணமாக ராமநாதபுரம் மாவட்டத்தில் ராமேசுவரம், மண்டபம், பாம்பன், தங்கச்சிமடம் மற்றும் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில், நேற்று மதியம் தொடங்கிய மழை இன்று மாலை வரையும் தொடர்ந்து பெய்து வருகிறது. ராமேசுவரம் சுற்றுவட்டார கடலோரப் பகுதிகளில் கனமழையும், அவ்வப்போது சாரல் மழையும் பெய்தது. பாம்பன் துறைமுகத்தில் 4ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் ராமேசுவரம், பாம்பன், மண்டபம், தங்கச்சிடம் பகுதிகளில் 7 செ.மீ.க்கு மேல் மழை பதிவாகியுள்ளது. தொடர் கனமழையால் ராமேசுவரம் அண்ணாநகர், காந்திநகர், திருவள்ளுவர் நகர், நடராஜபுரம், பாம்பன் சின்னப்பாலம் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட வீடுகளுக்குள் மழைநீர் புகுந்து தேங்கியுள்ளது.

வீடுகளுக்குள் மழைநீர் புகுந்ததால் வைத்திருந்த வீட்டு உபயோக பொருட்கள், கட்டில் பாத்திரம் தண்ணீரில் மிதக்கின்றது. தண்ணீரில் இருந்து பாதுகாக்க குழந்தைகளுடன் கட்டிலில் அமர்ந்து வாழ்க்கை நடத்துகின்றனர்.

பெரும்பாலான குடும்பங்கள் அங்குள்ள நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். சில பகுதிகளில் மழைநீருடன், கழிவுநீர் சேர்ந்து வீடுகளை சுற்றி இருப்பதால் நோய் தொற்று பரவும் அபாயம் உள்ளது.

இரவு நேரங்களில் தேங்கியுள்ள மழை நீரில் இருந்து பாம்பு, பூரான் உள்ளிட்ட விஷ ஜந்துகள் வீடுகளுக்குள் நுழைவதால் அச்சத்துடன் வாழ்ந்து வருவதாக அப்பகுதி மக்கள் வேதனையுடன் தெரிவித்தனர். ராமேசுவரம் நகராட்சி, பாம்பன், மண்டபம் ஊராட்சி நிர்வாகங்கள் தேங்கியுள்ள மழை நீரைவெளியேற்ற வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

மேலும் அண்ணாநகர், திருவள்ளுவர் நகர், காந்தி நகர் உள்ளிட்ட பகுதிகளில் தெருக்கள், வீடுகளில் மழை நீர் முழங்கால் அளவுக்கு தேங்கி இருப்பதால் அப்பகுதி மக்கள் தங்கள் வளர்க்கும் நாய், பூனை உள்ளிட்ட செல்ல பிராணிகள், ஆடுகளை தூக்கிக் கொண்டு மேடான வேறு பகுதிக்கு செல்கின்றனர்.

வானம் இருட்டி மேகமூட்டத்துடன் காணப்படுவதால் பாம்பன் சாலை பாலத்தில் வாகனங்கள் ஊர்ந்து செல்கின்றன. கடந்த 5 நாட்களாக மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்லவில்லை. தொடர்மழையால் ராமேசுவரம் உள்ளிட்ட கடலோர பகுதிகள் மற்றும் மாவட்டத்தில் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

# கனமழை எதிரொலி: கொடைக்கானலில் சுற்றுலா இடங்களுக்கு செல்ல தடை

கொடைக்கானல், நவ.30-

கொடைக்கானலில் பலத்த காற்றுடன் மழை பெய்து வருவதால் ஏரியில் படகு சவாரி, சுற்றுலா இடங்களுக்கு செல்ல தடை விதிக்கப்பட்டது.

டிட்வா புயல் காரணமாக கொடைக்கானல் மலைப் பகுதியில் நேற்று இரவு முதல் விடிய விடிய மழை பெய்தது. இன்று காலை முதல் பலத்த காற்றுடன் மழை பெய்ததால் சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பு கருதி ஏரியில் படகு சவாரி நிறுத்தப்பட்டது. காற்றின் வேகம் குறையாததால் மாலை வரை படகு சவாரிக்கு அனுமதிக்கவில்லை.

இதேபோல், சுற்றுலா இடங்களான மோயர் சதுக்கம், தூண் பாறை, பைன் மரக்காடுகள், குணா குகை மற்றும் பேரிஜம் ஏரிக்கு சுற்றுலா பயணிகள் செல்ல வனத்துறையினர் தடை விதித்தனர். நாள் முழுவதும் விட்டு விட்டு தொடர் மழை பெய்தது. வெள்ளி நீர் வீழ்ச்சி, கரடிச்சோலை உள்ளிட்ட அருவிகளில் நீர்வரத்து அதிகரித்தது. மேலும், மலைச்சரிவுகளில் புதிய அருவிகள் தோன்றி ரம்மியமாக காட்சியளித்தன.

பகலிலேயே சாலைகள் தெரியாத அளவுக்கு பனிப்பொழிவு இருந்தது. எதிரே வரும் வாகனங்கள் தெரியாததால் முகப்பு விளக்கை எரியவிட்டபடி வாகனங்கள் சென்றன.

மழை, பனிப்பொழிவால் சுற்றுலா பயணிகள் வெளியே வராமல் தங்கும் விடுதிகளில் முடங்கினர். பலத்த காற்று காரணமாக மலைக் கிராமங்களில் அடிக்கடி மின்தடை ஏற்பட்டது. காற்றில் ஈரப்பதம் அதிகரித்து கடும் குளிர் நிலவியதால் உள்ளூர் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

பழநி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் இன்று அதிகாலை முதல் தொடர் மழை பெய்தது. இதனால் சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. மழை காரணமாக பழநி, ஒட்டன்சத்திரம், கொடைக்கானலில் அடிக்கடி மின்தடை ஏற்பட்டது.





# சிவகங்கை மாவட்டம் காரைக்குடி கழக மாவட்ட திராவிடர் கழகம், பகுத்தறிவாளர் கழகம் சார்பில், கண்ணதாசன் மண்டபத்தில் "பெரியார் உலகம்" நிதி அளிப்பு விழாக் கூட்டம்

சிவகங்கை, நவ.30-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி கழக மாவட்ட திராவிடர் கழகம், பகுத்தறிவாளர் கழகம் சார்பில், கண்ணதாசன் மண்டபத்தில் "பெரியார் உலகம்" நிதி அளிப்பு விழாக் கூட்டம், மாவட்ட தி.க தலைவர் ம.கு.வைகறை தலைமையில், மாவட்ட தி.க. காப்பாளர் சாமிதிராவிடமணி, மாவட்ட துணைத்தலைவர் கொ.மணிவண்ணன், மாவட்ட.து செயலாளர் இ.ப.பழனிவேலு, மாவட்ட ப.க.தலைவர் செல்வம் முடியரசன், மாநகர. தி.க.தலைவர்ஜெகதீசன் ஆகியோர் முன்னிலையில்





நடந்தது. மாவட்டதில் செயலாளர் சி.செல்வமணி வரவேற்புரையாற்றினார். தி.க.சொற்பொழிவாளர். இரா.பெரியார் செல்வர் தொடக்கவுரையாற்றினார். திராவிடர் கழகத்தலைவர் கி.வீரமணி சிறப்புரையாற்றி சிறப்புரையாற்றினார்கள். காரைக்குடி மாவட்டக் கழகம் சார்பில் பொதுமக்களிடம், பெரியார் உலகம்" பெருந்தி ட்டத்திற்கு நன்கொடையாக வருவித்த, ரூபாய்:10, 76,000 (பத்துலட்சத்து எழுபத்தாராயிரம்) நிதி வழங்கப்பட்டது. இவ்விழாவில் தமிழக கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், திமுக இலக்கிய அணி மாநிலப் புரவலர், மேனாள் அமைச்சர் மு. தென்வைன், மாவட்ட திமுக துணைச்செயலாளர் சேங்கைமாறன், மாநகராட்சி துணை மேயர் நா.குணசேகரன், திமுக பொதுக்குழு உறுப்பினர் கரு. அசோகன், பசும்பொன் மனோகரன் (மதிமுக),பழ. இராமச்சந்திரன் (AI-TUC).சி.சு. இளைய கவுதமன் (வி.சி.க.) தி.க.மாநில ஒருங்கிணைப்பாளர்கள் இரா.குணசேகரன், இரா.ஜெயக்குமார், தி.க.சொற்பொழிவாளர் தி. என்னாரெசு பிராட்லா, தி.க. பொதுக்குழு உறுப்பினர் செயா திராவிடமணி, மாநில ப.க.து. செயலாளர் மு.சு.கண்மணி, அமைப்பாளர் ஒமுத்துக் குமார், மாவட்ட ப.க. ஆலோசகர் சு. முழுமதி, மாவட்ட ப.க.தலைவர் செல்வம் முடியரசன், மாவட்ட ப.க.செயலாளர் ந.செல்வராசன், மாநகர தி.க.து.செயலாளர் பழனிவேல்ராசன், TNSTC தி.தொ.க. அமைப்பாளர் சூரியமூர்த்தி உட்பட பலர் பங்கேற்றார்கள்.

# திருச்செந்தூர் அருகே படகில் சென்று வாழைத்தார் அறுவடை செய்த விவசாயிகள்

*தூத்துக்குடி, நவ.30–*

*வயல்களை வெள்ளம் சூழ்ந்ததால் விவசாயிகள் படகில் சென்று வாழைத்தார்களை அறுவடை செய்தனர். திருச்செந்தூர் அருகேயுள்ள செம்மறிகுளம் கஸ்பா பகுதிக்கு அதிக அளவு தண்ணீர் வந்ததால், அருகே உள்ள வாழைத் தோட்டங்களுக்குள் வெள்ளம் புகுந்தது.*



*சுமார் 50 ஆயிரம் வாழைகள் மழை வெள்ளத்தால் சூழப்பட்டன. இவை அறுவடைக்கு தயாராக இருந்தவை. மழைநீர் தேங்கி வாழைத்தார்கள் சேதமடையும் நிலை ஏற்பட்டதால், அவற்றை உடனடியாக அறுவடை செய்ய வேண்டிய கட்டாயம் விவசாயிகளுக்கு ஏற்பட்டது.*

*இதையடுத்து, மீனவர்களிடம் படகை வாடகைக்கு வாங்கி வந்து சுமார் 300 மீட்டர் தொலைவுக்கு சூழ்ந்திருந்த வெள்ளத்தைக் கடந்து வாழைத்தோட்டங்களுக்குச் சென்று வாழைத்தார்களை அறுவடை செய்து, படகில் வெளியே கொண்டு வந்தனர்.*

*பின்னர் லாரிகள் மூலம் வெளி மாநிலங்களுக்கு வாழைத்தார்களை அனுப்பி வைக்கப்பட்டன. ஆண்டுதோறும் மழைக்காலங்களில் இதுபோன்ற பிரச்சினைகளை சந்தித்து வருவதாகவும், இதற்கு தீர்வுகாண அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் விவசாயிகள் வலியுறுத்தினர்.*

# டிட்வா புயல்: நாகையில் நீடிக்கும் கனமழையால் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

நாகை, நவ.30-

நாகை மாவட்டத்தில் டிட்வா புயல் காரணமாக இன்று மதியம் 12 மணி வரை 94 செண்டிமீட்டர் அளவுக்கு கனமழை கொட்டித் தீர்த்துள்ளது.

மாநிலத்தில் மிக அதிகபட்சமாக நேற்று இரவு தொடங்கி இன்று மதியம் வரை கோடியக்கரை பகுதியில் 31.20 சென்டிமீட்டர் மழை அளவு பதிவாகியுள்ளது. வேதாரண்யம் அருகே உள்ள தோப்புத்துறையில் 20 சென்டிமீட்டர் மழை பதிவாகி இருந்தது. அதேபோல திருப்பூண்டியில் 20 சென்டிமீட்டர், வேளாங்கண்ணியில் 18 சென்டிமீட்டர், நாகையில் 17 சென்டிமீட்டர், வேதாரண்யத்தில் 18 சென்டிமீட்டர் மழை பதிவாகி இருந்தது.

டிட்வா புயல் காணமாக நாகை மாவட்டத்தில் அதி கனமழைக்கான ரெட் அலர்ட் எச்சரிக்கை விடப்பட்டுள்ள நிலையில், நாகை மாவட்டத்தில் அனைத்து பகுதிகளிலும் நேற்று இரவு முதல் கனமழை பெய்து வருகிறது. இன்று பகலிலும் இடைவிடாத கனமழை தொடர்ந்தது. இதனை சமாளிக்க மாவட்ட நிர்வாகம் சார்பில் அனைத்து முன்னேற்பாடு பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மாநில மற்றும் தேசிய பேரிடர் மீட்பு படைகளைச் சேர்ந்த 115 வீரர்கள் நிலைமையை சமாளிக்க தயார் நிலையில் உள்ளனர்.

நாகையில் இரவு முதல் கொட்டி தீர்க்கும் கனமழையால் நாகூர் வள்ளியம்மா நகர் குடியிருப்பு பகுதிக்குள் மழைநீர் புகுந்தது. சுமார் 50 குடும்பங்கள் வாழும் இந்த பகுதியில் பத்து வருடங்களுக்கு மேலாக முறையான வடிகால் வசதி இல்லாமல் மழை காலங்களில் பிரச்சினைகளை சந்தித்து வருகின்றனர். உடனடியாக துறை சார்ந்த அரசு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தற்போதைக்கு முகாம்களில் தங்க வைப்பதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும் எனவும் கோரிக்கை வைத்துள்ளனர்.

டிட்வா புயல் சின்னம் காரணமாக நாகை மாவட்டத்தில் கடல் கடும் சீற்றத்துடன் காணப்படுகிறது. காற்றின் வேகமும் கடலோரப் பகுதிகளில் அதிகரித்துள்ளது. மீனவர்கள் மறு உத்தரவு வரும் வரை கடலுக்குள் மீன் பிடிக்க செல்ல வேண்டாம் என்று மாவட்ட நிர்வாகம் உத்தரவிட்டது.

இதைத் தொடர்ந்து மாவட்டத்தில் அக்கரைப்பேட்டை, டாட்டா நகர், ஆரியநாட்டுத் தெரு, செருதூர், காமேஷ்வரம் , கல்லார், மணியன் தீவு, செருதலைகாடு, வானவன் மகாதேவி, புஷ்பவனம், கோடியக்கரை உள்ளிட்ட 27 மீனவ கிராமங்களில் உள்ள சுமார் 3500 நாட்டு படகுகள், 750 விசைப்படகுகள் கடலுக்கு மீன் பிடிக்கச் செல்லவில்லை. கடற்கரை ஓரங்களில் பாதுகாப்பாக படகுகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக ஒரு லட்சத்திற்கும் அதிகமான மீனவர்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

# காளையார்கோவில் கிழக்கு ஒன்றிய இளைஞரணி சார்பில், மரக்கன்று, மருத்துவ முகாம், திமுகவில் இளைஞர்கள் இணைப்பு

## உதயநிதி குணா ஏற்பாடு , ஒ செ. வே. ஆரோக்கியசாமி,நாகனி செந்தில்குமார், முத்துப்பாண்டி பங்கேற்பு

காளையார்கோவில், நவ.30-

சிவகங்கை மாவட்டம் காளையார் கோவிலில் தமிழ் நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞரணி செயலாளர், இளந்தலைவர் உதயநிதி ஸ்டாலின் 48 வது பிறந்தநாள் விழாவினை தமிழ்நாடு முழுவதும் திமுக வினர் கொண்டாடி வருகின்றனர்...

திமுக கொடியேற்றி பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கியும் , பள்ளி மாணவ மாணவியருக்கு கல்வி உபகரணங்கள் வழங்கியும், அன்னதானம், உடலுறுப்பு தானம், மருத்துவ முகாம் நடத்தியும் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றனர்.

அந்த வகையில் காளையார்கோவில் கிழக்கு ஒன்றிய செயலாளர், யூனியன் மேனாள் சேர்மன் வே. ஆரோக்கியசாமி தலைமையில் ஒன்றிய





இளேஞரணி துணை அமைப்பாளர் உதயநிதி குணா ஏற்பாட்டில் காளையார்கோவிலில் ஏவிகே மருத்துவமனையில் சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்றது... இந்த சிறப்பு மருத்துவ முகாமில் ஆலோசனை, கண் சிகிச்சை, இரத்தப் பரிசோதனை, சர்க்கரை, பொதுமருத்துவம் என சிகிச்சை மற்றும் மருந்துகள் வழங்கப்பட்டன....

மருத்துவ முகாமில் கலந்து கொண்ட பொதுமக்கள் அனைவருக்கும் மரக்கன்றுகள் வழங்கப்பட்டது...

இந்நிலையில் ஒன்றிய செய லாளர் வே. ஆரோக்கியசாமி தலைமையிலும், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர், மாவட்ட மேனாள் கவுன்சிலர் நாகனி பா. செந்தில்குமார், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்களான எஸ். எம். மதிவாணன், கிங் கார்த்திக், முகமது மஹாதீர், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் மாராத்தூர் முத்துப்பாண்டி ஆகியோரது முன்னிலையிலும் சுமார் எழுபதிற்கும் மேற்பட்ட இளைஞர்கள் தங்களை திமுகவில் இணைத்துக் கொண்டனர்...

இந்த நிகழ்ச்சியில் ஒன்றிய துணைச் செயலாளர் கருப்புச்சாமி, வனிதா கண்ணதாசன், அயலக அணி சந்திரபோஸ், விவசாய அணி கருணாகரன், ஒன்றிய சிறுபான்மை அணி ஆரோக்கிய சிறிய புஷ்பம், துணை அமைப்பாளர்கள் தென்றல் நகர் சுரேஷ், வைரப்பிரக்ஷ் குருபோஸ், சுரேஷ்குமார், ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் வழக்கறிஞர், நற்புதம் சதீஷ்வரன் , ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்ள் பையூர் சுகுமார், அருண்குமார் உள்ளிட்ட பொதுமக்கள், ஏவிகே மருத்துவமனை மருத்துவர்கள் மற்றும் ஊழியர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்...

நிகழ்ச்சி ஏற்பாடுகளை சிறப்பாக செய்திட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் உதயநிதி குணாவை ஒன்றிய செயலாளர் வே. ஆரோக்கியசாமி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி பா. செந்தில்குமார் உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகளும் வெகுவாகப் பாராட்டினர்...

# சபரிமலை ஐயப்பனை தரிசனம் செய்ய வேண்டிய சரியான முறை இது தான்

சபரிமலைக்கு மாலை அணிந்து லட்சக்கணக்கான பக்தர்கள் மண்டல விரதம் துவக்கி உள்ளனர். லட்சக்கணக்கான பக்தர்கள் சபரிமலை சென்று சுவாமி ஐயப்பனை தரிசனம் செய்து விட்டு திரும்பி உள்ளனர். சபரிமலைக்கு ஏற்கனவே பலமுறை சென்றிருந்தாலும், முதல் முறையாக செல்லும் கன்னி சாமிகளும் சபரிமலைக்கு தரிசனத்தின் முழு பலனையும் பெறுவதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதை தெரிந்து கொண்டு தங்களின் யாத்திரையை துவக்குவது சிறப்பானதாக இருக்கும்.

சபரிமலை யாத்திரை செல்வதற்கு என்று ஒரு முறை உள்ளது. பாரம்பரிய வழிமுறைகளை பின்பற்றி, முறையாக யாத்திரை மேற்கொண்டு, வழிபாட்டு முறைகளை மேற்கொண்டால் மட்டுமே சபரிமலை யாத்திரை முழுமை அடையும். ஆனால் சபரிமலை யாத்திரை என்பது இன்று, ஆரம்ப காலத்தில் இருந்த பாரம்பரிய முறையில் இருக்கிறதா என்று கேட்டால், கண்டிப்பாக இல்லை என்பது தான் சரியான முறை அறிந்தவர்கள் சொல்லும் பதிலாக இருக்கும்.

சபரிமலை யாத்திரை செல்லும் பக்தர்கள் நேராக பம்மை வரை வாகனங்களில் சென்று, அங்கிருந்து சன்னிதானம் சென்று, பதினெட்டாம் படி ஏறி, ஐயப்பனை தரிசனம் செய்து விட்டு திரும்பி விடுகிறார்கள். ஆனால் முந்தைய காலத்தில் பெரிய பாதை வழியாக, நீலிமலை ஏறி, அதன் வழியாக சன்னிதானத்தை அடைவதை தான் பெரும்பாலானவர்கள் கடைபிடித்து வந்தார்கள். அப்படி இல்லை என்றால் காட்டு பாதை வழியாக செல்வார்கள். சிறிய பாதை என்பதே முந்தைய காலத்தில் கிடையாது. சபரிமலை ஐயப்பனை தரிசனம் செய்வதற்கான முறை எது என்ன என்பதை இங்கு தெரிந்து கொள்ளலாம்.

சபரிமலையில் தரிசனம் செய்யும் சரியான முறை :

சபரிமலை யாத்திரை செல்லும் ஐயப்ப பக்தர்கள் முதலில் எரிமேலியில் இருந்தே தங்களின் பயணத்தை துவங்க வேண்டும். எரிமேலி தான் சுவாமி ஐயப்பன் தனது பயணத்தை துவங்கிய இடமாகும். அதனால் அங்கு சென்று தர்மசாஸ்தாவை வழிபட்டு விட்டு தான் சபரிமலை நோக்கி செல்ல வேண்டும்.

பிறகு பம்பையில் நீராடி, பம்பா கணபதி வணங்கி விட்டு தான், சன்னிதானம் நோக்கி நடை பயணத்தை துவக்க வேண்டும்.




சன்னிதானத்திற்கு சென்று பதினெட்டாம் படி ஏறுவதற்கு முன்பு தேங்காய் உடைத்து விட்டு, கருப்பசாமியையும், கருப்பாயி அம்மனையும் தரிசனம் செய்ய வேண்டும்.

பெரிய கடுத்த சாமியை வணங்கி விட்டு தான், பதினெட்டாம் படி ஏறி செல்ல வேண்டும்.

சுவாமி ஐயப்பனை தரிசனம் செய்த பிறகு, பரிவார தேவதைகளான நாகராஜா, கணபதி, மாளிகைப்புரத்து அம்மன், கொச்சு கொடுத்த சாமி, வன தேவதைகள், மலை தேவதைகள், ஐயப்பன் மணிமண்டபம் ஆகியவற்றை தரிசனம் செய்ய வேண்டும்.

சபரிமலை தரிசனத்தை முடித்த பிறகு நேரடியாக வீட்டிற்கு தான் வர வேண்டும். மற்ற கோவில்கள், சுற்றுலாத்தலங்களுக்கு செல்லக் கூடாது. விரதத்தையும் தொடர வேண்டும்.

சபரிமலையில் இருந்து வீட்டிற்கு திரும்பி வந்ததும் அங்கிருந்து கொண்டு வந்த பிரசாதத்தை சுவாமி முன்பு வைத்து, பூஜை செய்து வழிபட வேண்டும்.

வீட்டில் பெரியவர்கள் இருந்தால் அவர்கள் காலில் விழுந்து ஆசி பெற வேண்டும். சிறியவர்களுக்கு பிரசாதங்கள் வழங்க வேண்டும்.

வீட்டில் பூஜை செய்து, வழிபட்ட பிறகே மாலையை கழற்றி விட்டு, விரதத்தை நிறைவு செய்ய வேண்டும்.

மாலை அணியும் போது எப்படி பூஜை செய்து மாலை அணிந்தோமோ, அதே போல் பூஜை செய்து விட்டு தான் மாலையை கழற்ற வேண்டும்.

சபரிமலையில் இருந்து வீடு திரும்புவதற்கு முன் வழிலேயே பம்பையிலோ அல்லது வேறு கோவிலிலோ மாலையை கழற்றக் கூடாது.

# கார்த்திகை பௌர்ணமி 2025 : திருவண்ணாமலையில் கிரிவலம் எந்த நாளில் செல்ல வேண்டும்?

திருவண்ணாமலையில் சில குறிப்பிட்ட மாதம், நாட்களில் கிரிவலம் செல்வது பல மடங்கு அதிக புண்ணிய பலனை தரும். அப்படி ஒரு சிறப்பான நாள் தான் கார்த்திகை பௌர்ணமி தினம். இந்த ஆண்டு கார்த்திகை பௌர்ணமி திருவண்ணாமலை கிரிவல வழிபாட்டினை எந்த நாளில், எந்த நேரத்தில் மேற்கொள்ள வேண்டும், அப்படி கிரிவலம் செல்வதால் என்ன பலன்கள் கிடைக்கும், இதன் சிறப்புகள் என்ன என்பது பற்றி தெரிந்து கொள்ளலாம்.

ஒவ்வொரு மாதமும் வரும் பௌர்ணமியில் சிவ வழிபாட்டு செய்வது மிகவும் சிறப்பானதாகும். இது மன அமைதி, செல்வ வளம் ஆகியவற்றை தரக் கூடியதாகும். பௌர்ணமி நாளில் சிவ தரிசனம் செய்து, சிவ வழிபாடு செய்வது, கிரிவலம் செல்வம், விரதம் இருப்பது, புனித நீராடுவது ஆகியவை விசேஷ பலன்களை தரக் கூடியதாகும். பாவங்களை போக்கி, பெரும் புண்ணியத்தை தருவதுடன் சிவனின் அருளையும் தரக் கூடியதாகும். அதிலும் நினைத்தாலே முக்தியை தரும் புண்ணிய தலமான திருவண்ணாமலையில் பௌர்ணமியில் கிரிவலம் செல்வது பாவங்கள் போக்கி, முக்தியை அருளக் கூடியதாகும். அனைத்து பௌர்ணமிகளிலும் திருவண்ணாமலையில் கிரிவலம் செல்வது சிறப்பு.

அதிலும் சில குறிப்பிட்ட மாதங்களில் வரும் பௌர்ணமிகளில் கிரிவலம் செல்வது கூடுதல் பலன் தரக் கூடியதாகும். ஐப்பசி பௌர்ணமி எப்படி சிறப்பு வாய்ந்ததோ அதே போல் கார்த்திகை மாதத்தில் வரும் பௌர்ணமியும் மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும். கார்த்திகை பௌர்ணமியில் தான் ஜோதி வடிவமாக சிவபெருமான், விஷ்ணு மற்றும் பிரம்மாவிற்கு காட்சி அளித்ததாக புராணங்கள் சொல்கின்றன. அதே போல் கிரிவல வழிபாடு தோன்றியது, பார்வதிக்கு தனது உடலில் பாதியை கொடுத்து அர்த்தநாரீஸ்வரராக ஈசன் காட்சி அளித்து ஆகியவையும் இதே கார்த்திகை பௌர்ணமியில் தான் நடைபெற்றதாக சொல்லப்படுகிறது.



வழக்கமாக கார்த்திகை மாத பௌர்ணமியும், கார்த்திகை நட்சத்திரமும் இணைந்து வரும் நாளை தான் கார்த்திகை தீபத் திருநாளாக நாம் கொண்டாடுவது வழக்கம். ஆனால் இந்த ஆண்டு கார்த்திகை நட்சத்திரம் வரும் திருக்கார்த்திகை தீபத் திருநாள் டிசம்பர் 03ம் தேதி கொண்டாடப்படுகிறது. ஆனால் பௌர்ணமி திதி டிசம்பர் 04ம்தேதி தான் துவங்குகிறது. அதனால் கார்த்திகை பௌர்ணமியில் திருவண்ணாமலை கிரிவலம் செல்பவர்கள் டிசம்பர் 04 ம் தேதி தான் செல்ல வேண்டும். டிசம்பர் 04ம் தேதியன்று காலை 07.55 மணிக்கு தான் பௌர்ணமி திதி துவங்குகிறது. டிசம்பர் 05ம் தேதி அதிகாலை 03.55 மணி வரை பௌர்ணமி திதி உள்ளது.

இதனால் திருவண்ணாமலை கிரிவலம் செல்ல திட்டமிட்டிருக்கும் பக்தர்கள் டிசம்பர் 04ம் தேதியன்று வியாழக்கிழமை பகல் காலை 07.37 மணிக்கு துவங்கி, டிசம்பர் 05ம் தேதியன்று வெள்ளிக்கிழமை அதிகாலை 03.40 மணிக்குள்ளாக கிரிவல வழிபாட்டினை நிறைவு செய்ய வேண்டும். டிசம்பர் 04ம் தேதி மாலை 03.08 வரை கிருத்திகை நட்சத்திரம் இருப்பதால் அன்றைய தினம் காலையிலேயே கிரிவலத்தை துவங்குவது சிறப்பானதாகும். திருவண்ணா மலையில் வியாழக்கிழமையில் கிரிவலம்செல்வதால் ஞானம் பெருகும். குரு அருள் கிடைக்கும்.

பல ஜென்ம பாவங்களையும் போக்கிடும். அது மட்டுமல்ல இறந்த முன்னோர்களுக்கான இறுதிச் சடங்குகளை சரியாக செய்யாதவர்கள், அவர்களுக்கான பித்ரு தர்ப்பண காரியங்களை முறையாக செய்யாதவர்கள் ஆகியோர் இந்த வியாழக்கிழமையில் திருவண்ணாமலை கிரிவலம் செல்வதால் அந்த பாவங்களும் நீங்கிடும் என சாஸ்திரங்கள் சொல்கின்றன. கார்த்திகை பௌர்ணமி இந்த ஆண்டு, திருக்கார்த்திகைக்கு அடுத்த நாள் வருகிறது. அப்போது மலை உச்சியில் எரியும் மகாதீபத்தை தரிசித்த படியே கிரிவலம் வருவது பல கோடி புண்ணியங்களை பெற்றுத் தரும்.

# "சுழற்பந்து வீச்சுக்கு எதிராக இந்திய பேட்ஸ்மேன்கள் தடுமாறுவது ஏன்?" கபில் தேவ் விளக்கம்



சுழற்பந்து வீச்சுக்கு எதிராக இந்திய கிரிக்கெட் அணியின் பேட்ஸ்மேன்கள் தடுமாறுவது ஏன்? என்பது குறித்து முன்னாள் கேப்டன் கபில் தேவ் விளக்கியுள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணி, அதன் சொந்த மண்ணில் கடந்த ஆண்டு நியூஸிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை 03 என்ற கணக்கில் இழந்தது. தொடர்ந்து அண்மையில் தென் ஆப்பிரிக்க அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரை 02 என்ற கணக்கில் இழந்தது. இந்த இரண்டு தொடரிலும் (5 டெஸ்ட் போட்டிகள்) மொத்தமாக 62 முறை எதிரணியின் சுழற்பந்து வீச்சாளர்களிடம் விக்கெட்டை இழந்தனர்.

இந்தியா உட்பட ஆசிய நாடுகளை சேர்ந்த கிரிக்கெட் அணிகளின் பேட்ஸ்மேன்கள் பொதுவாகவே சுழற்பந்து வீச்சுக்கு எதிராக சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்துவார்கள். ஆனால், இந்த இரண்டு தொடர்களில் இந்தியாவுக்கு அது தலைகீழாக மாறியுள்ளது.

"இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் பேட்ஸ்மேன்கள், உள்ளூர் கிரிக்கெட் தொடர்களில் வெவ்வேறு ரகமான ஆடுகளங்களில் சுழற்பந்து வீச்சுக்கு எதிராக சிறப்பாக ஆடிய அனுபவத்தை கொண்டிருந்தனர். இதோடு தனிப்பட்ட பேட்ஸ்மேன்களின் ஆட்ட பாணி, ஃபூட் வொர்க் உள்ளிட்டவையும் இதில் அடங்கி இருக்கும்.

இந்நிலையில், இன்றைய தலைமுறையை சேர்ந்த முன்னணி வீரர்கள் எத்தனை பேர் உள்ளூர் கிரிக்கெட் தொடர்களில் விளையாடுகிறார்கள் என்ற கேள்வியை நான் முன்வைக்க விரும்புகிறேன். அதுதான் இதில் மிக முக்கியமான ஒன்று. அப்படி நீங்கள் உள்ளூர் கிரிக்கெட் விளையாடாமல், தரமான பந்து வீச்சாளர்கள் எதிர்கொள்ளாமல் இருந்தால் நிச்சயம் தடுமாறுவீர்கள்.

இதில் ஆடுகள அமைப்பு முக்கியமான ஒன்று. இரண்டரை நாட்களில் முடியும் ஆட்டம் ஐந்து நாட்கள் ஆடும் பார்மெட்டுக்கு உகந்தது அல்ல. டாஸை இழந்தால், ஆட்டத்தில் தோல்வி என்ற நிலையில் உள்ளது. மறுபக்கம் டி20 மற்றும் ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் இப்போது அதிகம் விளையாடி வருகிறோம். இத்தகைய சூழலில் சுழற்பந்து வீச்சுக்கு சாதகமான ஆடுகளங்களில் பொறுமையுடன் ஆட்டத்தை அணுகுவது அவசியம். மேலும், இது மாதிரியான ஆடுகளங்களில் நிலையாக விளையாட உயர்மட்ட திறன் அவசியம். வேகப்பந்து வீச்சை காட்டிலும் சுழற்பந்து வீச்சுக்கு எதிராக சிறப்பாக விளையாட வேண்டிய திறன் இங்கு மிக முக்கியம். டெஸ்ட் கிரிக்கெட்டில் பேட் செய்வது ஆடுகளத்தில் நிலைத்து நின்று ஆடுவது என்பதை தான் குறிக்கிறது.

நிச்சயம் சொந்த மண்ணில் நியூஸிலாந்து மற்றும் தென் ஆப்பிரிக்கா வசம் இந்தியா டெஸ்ட் தொடரை முற்றிலும் இழந்தது எனக்கு சர்ப்ரைஸாக இருந்தது. ஆனால், இந்த தொடருக்கு நாம் இன்னும் சிறந்த முறையில் தயாராகி இருக்க வேண்டும் என கருதுகிறேன். ஏனெனில் டெஸ்ட் கிரிக்கெட் என்பது முற்றிலும் மாறுபட்டது" என கபில் தேவ் தெரிவித்துள்ளார்.

# சையத் மோடி பாட்மிண்டன்: உன்னதி, கிடாம்பி வெற்றி




சையத் மோடி சர்வதேச பாட்மிண்டன் போட்டியின் அரை இறுதியில் விளையாட இந்தியாவின் உன்னதி ஹூடா, தன்வி சர்மா, கிடாம்பி ஸ்ரீகாந்த் ஆகியோர் முன்னேறியுள்ளனர்.

உத்தரபிரதேசத்தின் லக்னோவில் இப்போட்டி நடை பெற்று வருகிறது. நேற்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் கால் இறுதிப் போட்டியில் தன்வி சர்மா 21-13, 21-19 என்ற செட் கணக்கில் ஹாங்காங் வீராங்கனை லோ சின் யான் ஹாப்பியை வீழ்த்தினார். மற்றொரு கால் இறுதியில் இந்திய வீராங்கனை உன்னதி ஹூடா 21-15, 13-21, 21-16 என்ற கணக்கில் சக நாட்டைச் சேர்ந்த ரக் சிதா சந்தோஷை சாய்த்தார்.

ஆடவர் கால் இறுதிப் போட்டியில் இந்திய வீரர் கிடாம்பி ஸ்ரீகாந்த் வெற்றி பெற்று அரை இறுதிக்கு முன் னேறினார். கால் இறுதிப் போட்டியில் கிடாம்பி ஸ்ரீகாந்த் 21-14, 11-4 என்ற கணக்கில் சக நாட்டு வீரர் பிரியான்ஷு ரஜாவத்தை வீழ்த்தினார். அரை இறுதியில் அவர் மிதுன் மஞ்சுநாத்தை எதிர்த்து விளையாடவுள்ளார்.

# சையது முஸ்டாக் அலி டி20 தொடர்: ஆயுஷ் மாத்ரே விளாசலில் மும்பை வெற்றி





சையது முஸ்டாக் அலி டி20 கிரிக்கெட் தொடரில் நேற்று லக்னோவில் நடை பெற்ற ஆட்டத்தில் மும்பை விதர்பா அணிகள் மோதின. முதலில் பேட் செய்த விதர்பா 9 விக்கெட்கள் இழப்புக்கு 192 ரன்கள் குவித்தது. அதர்வா டைட் 36 பந்துகளில், ஒரு சிக்ஸர், 9 பவுண்டரிகளுடன் 64 ரன்களும், அமன் மோஹதே 30 பந்துகளில், 2 சிக்ஸர்கள், 7 பவுண்டரிகளுடன் 61ரன்களும் விளாசினர்.

192 ரன்கள் இலக்குடன் பேட் செய்த மும்பை அணி 17.5 ஓவர்களில் 3 விக் கெட்கள் இழப்புக்கு 194 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது. ஆயுஷ் மாத்ரே 53 பந்துகளில், 8 சிக்ஸர்கள், 8 பவுண்டரிகளுடன் 110 ரன்களும், ஷிவம் துபே 19 பந்துகளில், 3 சிக்ஸர்கள், 3 பவுண்டரிகளுடன் 39 ரன்களும் விளாசினர். சூர்யகுமார் யாதவ் 30 பந்துகளில், ஒரு சிக்ஸர், 4 பவுண்டரிகளுடன் 35 ரன்கள் சேர்த்தார்.

தமிழக அணி தோல்வி: அகமதாபாத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் டெல்லி அணி 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் தமிழகத்தை வீழ்த்தியது. முதலில் பேட் செய்த தமிழக அணி 7 விக்கெட்கள் இழப்புக்கு 198 ரன்கள் குவித்தது. துஷார் ரஹேஜா 41 பந்துகளில், 72 ரன்களும், அமித் சாத்விக் 40 பந்துகளில், 54 ரன்களும் சேர்த்தனர்.

199 ரன்கள் இலக்குடன் பேட் செய்த டெல்லி அணி 20 ஓவர்களில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 203 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது. யாஷ் துல் 71, ஆயுஷ் பதோனி 41, நிதிஷ் ராணா 34, பிரியன்ஷ் ஆர்யா 35 ரன்கள் சேர்த்தனர்.

# டிரான்ஸ்பரண்ட் உடையில் திவ்யபாரதி



கடந்த 2017ல் சாந்தனு பாக்யராஜ் நடிப்பில் வெளியான 'முப்பரிமாணம்' என்ற படத்தில், ஹீரோயின் சிருஷ்டி டாங்கேவின் தோழியாக நடித்து அறிமுகமானவர் திவ்யபாரதி. பிறகு ஜி.வி.பிரகாஷ் குமார் ஜோடியாக 'பேச்சிலர்', 'கிங்ஸ்டன்', விஜய் சேதுபதியுடன் 'மகாராஜா' ஆகிய படங்களில் நடித்த அவர், தற்போது 'மதில் மேல் காதல்' என்ற படத்தில் நடித்து முடித்துள்ளார். 'கோட்' என்ற படத்தின் மூலம் தெலுங்கில் அறிமுகமாகிறார்.

நாள்தோறும் தனது சோஷியல் மீடியாவில் சுறுசுறுப்பாக இயங்கி வரும் அவர், தனது கிளாமர் போட்டோக்களை பதிவிட்டு ரசிகர்களின் கவனத்தை ஈர்த்து வருகிறார். அந்தவகையில் தற்போது அவர் வெளியிட்டுள்ள போட்டோவில், டிரான்ஸ்பரண்ட் உடையில் விதவிதமாக போஸ் கொடுத்துள்ளார். அந்த போட்டோக்கள் வைரலாகி வருகிறது.

# துல்கர் சல்மானின் 'ஐ அம் கேம்' ஃபர்ஸ்ட் லுக் வெளியீடு

துல்கர் சல்மான் நடித்து வரும் படத்துக்கு 'ஐ அம் கேம்' எனப் பெயரிட்டு ஃபர்ஸ்ட் லுக்கை வெளி யிட்டுள்ளது படக்குழு.

'ஸிஞ்நீ' இயக்குநர் நஹாஸ் ஹிதாயத் இயக்கி வரும் படத்தில் நாயகனாக நடித்து வருகிறார் துல்கர் சல்மான். இதன் படப்பிடிப்பு மும்முரமாக நடைபெற்று வந்தது. தற்போது இப்படத்துக்கு 'ஐ அம் கேம்' எனப் பெயரிட்டு ஃபர்ஸ்ட் லுக்கை வெளியிட்டுள்ளது படக்குழு. இதனை முன்வைத்து பலரும் படக்குழுவினருக்கு வாழ்த்து தெரிவித்து வருகிறார்கள்.

இதன் கதையினை சஜீர் பாபா, இஸ்மாயில் அபூபக்கர், பிலால் மொய்து எழுதியிருக்கிறார்கள். வசனங்களை ஆதர்ஷ் சுகுமாறன் மற்றும் ஷஹபாஸ் ரசீத் எழுதியிருக்கிறார்கள். இப்படம் பெரும் பொருட்செலவில் உருவாகி வரும் ஆக்‌ஷன் கலந்த த்ரில்லர் கதையாகும். இது துல்கர் சல்மான் நடிப்பில் உருவாகி வரும் 40 வது படமாகும்.

இதில் ஆண்டனி வர்கீஸ், மிஷ்கின், கதிர், பார்த் திவாரி, சம்யுக்தா விஸ்வநாதன் உள்ளிட்ட பலர் துல்கர் சல்மானுடன் நடித்து வருகிறார்கள். இதன் ஆக்‌ஷன் காட்சிகளை அன்பறிவ் உருவாக்கி வருகிறார்கள். இதன் ஒளிப்பதிவாளராக ஜிம்ஷி காலித், இசையமைப்பாளராக ஜேக்ஸ் பிஜாய், எடிட்டராக சமன் சக்கோ ஆகியோர் பணிபுரிந்து வருகிறார்கள்.



# 21 வயதை கடந்த அனிகா




கேரளாவில் பிறந்து, தனது 6வது வயதில் 'கதா துடருன்னு' என்ற மலையாள படத்தில் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமானவர், அனிகா சுரேந்திரன். தமிழ், மலையாளம், தெலுங்கில் கடந்த 15 ஆண்டுகளாக நடித்து வருகிறார். தமிழில் 'என்னை அறிந்தால்', 'விஸ்வாசம்' ஆகிய படங்களில் அஜித் குமார் மகளாக நடித்து பிரபலமானார்.

மேலும் 'நானும் ரௌடி தான்', 'மிருதன்', 'மாமனிதன்', 'பி.டி சார்', 'நிலவுக்கு என்மேல் என்னடி கோபம்' உள்பட சில படங்களில் நடித்தார். சமீபத்தில் புடவையில் அவர் வெளியிட்டுள்ள போட்டோக்கள் ரசிகர்களை ஈர்த்து வருகிறது. கடந்த 27ம் தேதி தனது 21வது பிறந்தநாளை, தனது தாயுடன் இணைந்து அனிகா சுரேந்திரன் கேக் வெட்டி கொண்டாடிய போட்டோக்கள் வைரலாகி வருகிறது.



## தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு முதியோர் இல்லத்தில் அறுசுவை உணவு வழங்கப்பட்டது

தாம்பரம், நவ.30-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் தமிழ்நாடு துணை முதல்வரும், இளைஞர் அணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு சேலையூர் கேம்ப் ரோடு பகுதியில் உள்ள முதியோர் இல்லத்தில் உள்ள முதியோர்களுக்கு தாம்பரம் மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் சிவசுப்பிரமணியன் ஏற்ப்பாட்டில் அறுசுவை வழங்கும் நிகழ்வில் தாம்பரம் மாநகர மேற்கு பகுதி செயலாளரும், தாம்பரம் மாநகராட்சி 5வது மண்டல குழு தலைவருமான எஸ்.இந்திரன் அவர்கள் கலந்து கொண்டு முதியோர்களுக்கு அறுசுவை உணவு வழங்கி சிறப்பித்தார். இதில் பகுதி துணை செயலாளர் கீ.வேல்மணி, மாநகர மகளீர் அணி அமைப்பாளர் ரமணி ஆதிமூலம், மாநகர பிரதிநிதி அ.லோகேஷ்குமார்,மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் வீ.கார்த்திக், வட்ட பிரிதிநிதி திவகாரன், திருமாறன், மாநகர விளையாட்டு மேம்பாட்டு அமைப்பாளர் தாமோதரன், பகுதி மாணவர் அணி துணை அமைப்பாளர் வி.கிஷோர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



## குன்றத்தூர் வட்டத்தில் அதிகாரிகளை சந்திக்க முடியாமல் பொதுமக்கள் பரபரப்பு மூன்று வருடமாக மனுக்கள் நிலுவையில் இருப்பதாக குற்றச்சாட்டு

குன்றத்தூர், நவ.30-

காஞ்சிபுரம் மாவட்டம் குன்றத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் ஒருநாளும் வட்டாட்சியரை நேரில் சந்திக்க முடியவில்லை என பொதுமக்கள் கடும் ஆதங்கம் தெரிவித்துள்ளனர். கடந்த மூன்று ஆண்டுகளாக தாங்கள் அளித்த மனுக்கள் எந்த நிலையிலும் தீர்வு பெறாமல் நிலுவையில் இருப்பதாகவும், எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என பாதிக்கப்பட்ட நில உரிமையாளர்கள் குற்றம் சாட்டினர்.

இது குறித்து செய்தியாளர்களை சந்தித்த அவர்கள், தலைமைச் செயலகம் உள்ளிட்ட பல்வேறு அலுவலகங்களில் பலமுறை புகார் செய்தும் இதுவரை பதில் கிடைக்காதது மக்கள் நலனைக் கவனிக்க வேண்டிய அதிகாரிகளின் அலட்சியத்தை காட்டுவதாக தெரிவித்தனர்.

தமிழக முதல்வர் “மக்களுக்கான முதல்வர்” என கூறப்படும் நிலையில், சில அரசு ஊழியர்கள் பொதுமக்களின் பிரச்னைகளைக் கண்டு கொள்ளாதது வருத்தம் தருவதாகவும், அவர்கள் கூறினர்.

சிறிது சிறிதாக சேமித்து வாங்கிய தங்கள் நிலத்தை அரசு தன்னிச்சையாக அபகரிக்க முயற்சி செய்வதாகவும், இதனால் பல குடும்பங்கள் அச்சத்திலும் அவதியிலும் உள்ளன என்றும் குறிப்பிட்டனர்.

நிலத்தை மீட்டுத்தர தமிழக முதல்வர் நேரடியாக தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் தங்கள் கோரிக்கையை வலியுறுத்தி தெரிவித்தனர்.

## கீழக்கோட்டை அரசு பள்ளியில் காக்கா முட்டை சிறார் திரைப்படம் திரையிடல்

காளையார் கோவில், நவ.30-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியத்தில் உள்ள கீழக்கோட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் சிறார் திரைப்படமான காக்கா முட்டை திரையிடப்பட்டது. சிறார் திரைப்படத்தை திரையிடுவதற்கு முன் அறிவியல் பட்டதாரி ஆசிரியர் ஆரோக்கியசாமி சிறார் திரைப்படத்தை பள்ளிகளில் திரையிடுவதன் மூலம் மாணவர்களுக்கு சமூகநீதி சமத்துவம் அறிவியல் பார்வை ஆகியவ ற்றைப் பற்றிய விழிப்புணர்வு மற்றும் அதன் மீதான பார்வையை ஏற்படுத்துவதற்கும் மாணவர்கள் திரைப்படங்களை பகுத்தறிவுடன் அணுகவும் தங்கள் வாழும் சூழலை புரிந்து கொள்ளவும் தன்னம்பிக்கை நட்பு பாராட்டுதல் குழுவாக இணைந்து செயல்படுதல் பாலின சமத்துவம் ஆகிய பண்பு நலன்களை அடையாளம் காண்பதற்கும் தங்களிடம் உள்ளார்ந்த புதைந்திருக்கும் படைப்பாற்றலை வெளிகொணர செய்வதற்கும் பெரிதும் உதவியாக



உள்ளது. படத்தின் புகைப் படத்தைக் காண்பித்தும் கதைக்கருவை சுருக்கமாக எடுத்துக்கூறினார். பின் திரைப்படம் திரையிடப்பட்டது. மாணவ மாணவிகள் திரைப்படத்தை அமைதியாக கண்டுகளித்தனர். அதைத் தொடர்ந்து படத்தின் கதைக்கரு மற்றும் படத்தில் இருந்து பெறப்பட்ட அனுபவப் பகிர்வு குறித்து கலந்தாலோசிக்கப்பட்டது. திரைப்படத்தில் மிகவும் பிடித்த காட்சி அதற்கான காரணங்கள் பிடிக்காத காட்சி மற்றும் அதற்கான காரணங்களை மாணவர்களிடம் கேட்டு பகிர்ந்துகொள்ளப்பட்டது. படத்தில் இடம் பெற்ற ஏதேனும் ஒரு கதாபாத்திரத்தைப் பேட்டி எடுக்க வினாக்கள் தயார் செய்யப்பட்டது. மாணவர்களிடம் ஏழை பணக்காரன் என்ற பாகுபாடு இல்லா நிலையை உருவாக்க ஏற்றத்தாழ்வுகளை நீக்க கல்வியே சிறந்த ஆயுதம் என்பதை உணர்ந்து அனைவரும் சிறப்பாக கல்வி கற்க கேட்டுக்கொள்ளப் பட்டார்கள். கணிதப் பட்டதாரி ஆசி ரியை மீனாட்சி ஆங்கிலப் பட்டதாரி ஆசிரியை கீதா ஆசிரியை வாசுகி பெற்றோர் கஸ்தூரி திரைப்படத்தை பார்வையிட்டார்.




## மாவட்ட அளவிலான அறிவியல் பழகு வானவில் மன்றப் போட்டிகள்

சிவகங்கை, நவ.30-

சிவகங்கை மாவட்டத்தில் தமிழக அரசால் பள்ளிக்கல்வித் துறையில் அரசு நடுநிலை உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவிகளுக்கு அறிவியல் ஆர்வத்தை தூண்டவும் கணிதம் குறித்த விசாலமான அறிவை பெறவும் வானவில் மன்றம் செயல்பட்டு வருகிறது.

2025 2026 ஆம் ஆண்டிற்கான அறிவியல் பழகு வானவில் மன்றப் போட்டிகள் அனைத்து அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலும் நவம்பர் 11 ஆம் தேதி முதல் 14ஆம் தேதி வரை நடைபெற்றது. 1 குழுவிற்கு 3 பேர் வீதம் அதிக அளவிலான குழுக்கள் போட்டிகளில் பங்கேற்றனர். பள்ளி அளவில் நடைபெற்ற



போட்டிகளில் வெற்றி பெற்ற முதல் மூன்று குழுக்கள் நவம்பர் 20 அன்று நடைபெற்ற ஒன்றிய அளவிலான போட்டிகளில் பங்கேற்றனர். ஒன்றிய அளவில் வெற்றி பெற்ற குழுக்கள் மாவட்ட அளவில் நடைபெற்ற போட்டிகளில் கலந்துகொண்டனர்.

மாவட்ட அளவிலான அறிவியல் பழகு வானவில் மன்றப் போட்டிகள் மாவட்டத் திட்ட அலுவலக கூட்டரங்கில் நடைபெற்றது. இப்போட்டிகளை சிவகங்கை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் பாலதண்டாயுதபாணி தொடங்கி வைத்தார். மாணவர்களின் ஆய்வு மாதிரிகள் காட்சிப்படுத்தப்பட்டு அவற்றை கல்லூரி பேராசிரியர்கள் முனைவர் கருணாகரன் முனைவர் சிவா முனைவர் கற்பூரரஞ்சித் முனைவர் ஆரோன் முனைவர் ராஜபூபதி முனைவர் சசிரேகா ஆகியோர் சிறப்பான நடுவர் பணியாற்றினர். வானவில் மன்ற இணை ஒருங்கிணைப்பாளர் ஆரோக்கியசாமி அறிவியல் ஆய்வு குறித்து நோக்கவுரையாற்றினார். ஒவ்வொரு ஒன்றியத்திலிருந்தும் வெற்றி பெற்ற முதல் மூன்று குழுக்கள் என 12 ஒன்றியங்களிலிருந்தும் 36 குழுக்கள் உள்ள 108 மாணவர்களுக்கும் பதக்கத்தையும் சான்றிதழ்களையும் உதவித்திட்ட அலுவலர் பீட்டர் லெமாயு வழங்கினார். மாவட்ட அளவிலான போட்டிகளில் வெற்றிபெற்ற ராமநாதன் செட்டியார் நகராட்சி உயர்நிலைப்பள்ளி காரைக்குடி 48 காலனி நகராட்சி நடுநிலைப்பள்ளி சிவகங்கை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி தளக்காவூர் என முதல் மூன்று குழுக்கள் டிசம்பர் முதல் வாரத்தில் நடைபெறும் மாநில அளவிலான போட்டிகளில் கலந்துகொள்ள இருக்கிறார்கள். ஏற்பாடுகளை ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சகாய பிரிட்டோ செய்திருந்தார். வானவில் மன்ற கருத்தாளர்கள் பாண்டிச்செல்வி ஜெயபிரியா பிரின்சி தீபா சித்ரா நீலாயதாட்சி லலிதா மணவாளன் ஆசிரியர் கணக்காளர் சிங்குபாண்டி கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



## தாம்பரம் அடுத்த மதுரப்பாக்கம் ஊராட்சியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா

மதுரபாக்கம், நவ.30-

செங்கல்பட்டு மாவட்டம், புனித தோமையார் மலை வடக்கு ஒன்றியம், மதுரபாக்கம் ஊராட்சியில் (நவம்பர் :28) கழக இளைஞரணி செயலாளர்,துணை முதல்வர்., உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. மதுரபாக்கம் ஊராட்சி மன்ற தலைவர்., வேல்முருகன் மற்றும் மதுரப்பாக்கம் ,அகரம் தென், திருவஞ்சேரி, ஒட்டியம்பாக்கம் ஊராட்சிகளின் ஒன்றிய கவுன்சிலரமான., அமுதா வேல்முருகன் தலைமையில் கழக கொடியை ஏற்றி கேக் வெட்டி பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி நடைபெற்ற நிகழ்ச்சியில் 1000 பேருக்கு அருஞ் சுவை பிரியாணி மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாக கொண்டாடினார்கள். உடன் ஊராட்சி ஒன்றிய, வார்டு உறுப்பினர்கள் மற்றும் திமுக கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.




■ தென்காசி மாவட்டம் சொக்கம்பட்டி திரிகூடபுரத்தில் சாய் இண்டர்நேஷனல் சோசியல் சர்வீஸ் அறக்கட்டளை சார்பாக பெண்களுக்கான இலவச சுய தொழில் பயிற்சியாக ஆரி வொர்க் ,அழகுகலை ,தையல் பயிற்சி வகுப்பு மற்றும் சுய தொழில் விழிப்புணர்வு நிகழ்ச்சி அறக்கட்டளை நிறுவனர் மற்றும் தலைவர் வெங்கடேஷ்வரன் தலைமையில் நடைபெற்றது. இம்முகாமில் அறக்கட்டளையின் மாநில பொறுப்பாளர் அன்னலட்சுமி சிறப்புரையாற்றினார்,மற்றும் நிர்வாகிகள் முத்துசெல்வி நன்றியுரை நிகழ்த்தினார் சமூக ஆர்வலர் முகர்ஷினி நாச்சியார் நிகழ்வை ஒருங்கிணைப்பு செய்தார், இம்முகாமில் 20 க்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்..



■ ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி ஈரோடு, திண்டல் வேளாளர் மகளிர் கல்லூரி தேர்வு மையத்தில் நடைபெற்ற கிராம உதவியாளர் பணியிடங்களுக்கான எழுத்துத்தேர்வினை ஆய்வு மேற்கொண்டார்.

## பம்மல் அன்னை தெரேசா மாற்றுத்திறனாளி வெல்பேர் டிரஸ்ட் சார்பாக மாற்றுத்திறனாளிகளுக்காக சிறப்பு சேவை முகாம், விழிப்புணர்வு நிகழ்ச்சி

கீரப்பாக்கம், நவ.30-

செங்கல்பட்டு மாவட்டம் கீரப்பாக்கம் தமிழ்நாடு நகரப்புற வாழ்விட மேம்பாடு அடுக்குமாடி குடியிருப்பு உள்ள 16/11/2025 அன்று மக்களுக்காக பம்மல் அன்னை தெரேசா மாற்றுத்திறனாளி வெல்பேர் டிரஸ்ட் சார்பாக மாற்றுத்திறனாளிகளுக்காக சிறப்பு சேவை முகாம், விழிப்புணர்வு நிகழ்ச்சி மற்றும் பொதுமக்கள் நலன் கருதி கண் பரிசோதனை முகாம், அக்கு பஞ்சர் போன்ற இலவச மருத்துவ பரிசோதனை நடைபெற்றது. அதனை தொடர்ந்து கீரப்பாக்கம் பகுதியில் உள்ள மக்களுக்காக பம்மல் அன்னை தெரேசா மாற்றுத்திறனாளி வெல்பேர் டிரஸ்ட் சார்பாக கீரப்பாக்கத்தில் புதிய கிளை திறக்கப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளிகள், முதியோர், கை பெண்கள், கணவரால் கைவிடப்பட்டோர், தாய் அல்லது தந்தை இழந்த குழந்தைகள் மற்றும் முதிர்கன்னி அவர்களுக்காக குறை தீர்க்கும் பெட்டியில் மனுவாக எழுதிப்



போட்டனர். மேலும் சிறப்பாக மருத்துவ முகாம் நடைபெற்றது. சிறப்பு விருந்தினர்கள் ஊராட்சி மன்ற தலைவர் செல்வ சுந்தரி, கீரப்பாக்கம் ஒன்றிய ஊராட்சி கீரப்பாக்கம் ஒன்றிய ஊராட்சி மன்றம் உறுப்பினர் பி.ராஜேந்திரன், காட்டாங் குளத்தூர் வடக்கு ஒன்றிய கழக பொருளாளர் முன்னாள் கீரப்பாக்கம் ஒன்றிய ஊராட்சி மன்றம் தலைவர் ரமேஷ், இன்ஸ்பெக்டர் கீழப்பாக்கம் காவல்துறை அதிகாரி சத்தியமூர்த்தி, பம்மல் சமூக ஆர்வலர் தனசேகர், சமூக ஆர்வலர் கீரப்பாக்கம் அறக்கட்டளையின் இயக்குனர் பம்மல் கவிதா, தலைவர் பம்மல் கலா, கௌரவத் தலைவர் அருணகிரி ஐயா, செயலாளர் எஸ்.தேவி, கீரப்பாக்கம் கிளை செயலாளர் ஜி.தனசேகர் எம்.சதீஷ் பாபு, துணைச் செயலாளர் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



## புனித தோமையார் மலை ஒன்றியத்திற்குட்பட்ட நன்மங்கலத்தில் திமுக சார்பில் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா

நன்மங்கலம், நவ.30-

செங்கல்பட்டு மாவட்டம், புனித தோமையார் மலை தெற்கு ஒன்றியம், நன்மங்கலம் ஊராட்சியில் (நவம்பர் : 27) துணை முதல்வர்., உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர்., டி.எஸ். பாரதிராஜன் நிகழ்ச்சி ஏற்பாட்டில், ஒன்றிய பெருந்தலைவர் .,எஸ். சங்கீதா பாரதிராஜன் மற்றும் ஒன்றிய கழக செயலாளர்., ஜி.வெங்கடேசன், ஒன்றிய கழக துணை செயலாளர்., சமாதானம் நல்லமுத்து ஆகியோர் முன்னிலையில், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர்., எஸ்.அரவிந்த் ரமேஷ் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு கழக கொடி ஏற்றி, அறுசுவை உணவு சிக்கன் பிரியாணி வழங்கி கொண்டாடப்பட்டது . நிகழ்வில் கிளைக் கழக செயலாளர்கள் , துணை தலைவர், வார்டு உறுப்பினர்கள், இளைஞர் அணியினர், கழக உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161